# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 08 செவ்வாய் 22.06.2021 மலர் - 2, இதழ் - 77


## மீளுமா தமிழக பொருளாதாரம்?



தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரில், தமிழகப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க பாரத ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன், நோபல் பரிசுபெற்ற அமெரிக்கப் பொருளாதார நிபுணர் எஸ்தர் டஃப்ளோ, ராஞ்சி பல்கலைக்கழக டெல்லி ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஜீன் ட்ரெஸ், மத்திய அரசின் முன்னாள் நிதித்துறைச் செயலர் நாராயணன், மத்திய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன், உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட நிபுணர்குழு அமைக்கப்படும். இக்குழு மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த முதல்வருக்கு ஆலோசனைகள் வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யார் இவர்கள்?

முன்னாள் பாரத ரிசர்வ் வங்கி ஆளுநராக இருந்தவர்தான் என்றாலும், பயங்கரவாதம், போலி 1,000, 500 ரூபாய் நோட்டுகள், நிழல் பொருளாதாரம் உள்ளிட்ட பல தேசவிரோதக் குற்றங்களை களைய, மத்திய அரசு கொண்டுவந்த 1,000 மற்றும் 500 ரூபாய் நோட்டுகள் ஒழிப்பை குறை கூறியவரும் சோனியா, ப. சிதம்பரத்துக்கு நெருக்கமானவரும்தான் இந்த ரகுராம் ராஜன். தீவிர இடதுசாரி ஆதரவாளரும் மத்திய அரசையும் அதன் அனைத்து திட்டங்களையும் குறை கூறுவதையே முக்கிய வேலையாக கொண்ட அபிஜித் பேனர்ஜியின் மனைவிதான் எஸ்தர் டஃப்ளோ. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் சோனியாவின் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றவர்தான் ஜீன் ட்ரெஸ். ஜார்கண்டில், சட்டத்தை மீறியதற்காக ஜீன் ட்ரெஸ், அவரது நண்பர் விவேக் குப்தாவையும் காவல்துறை கைது செய்து விசாரித்தது. அப்போது அதற்கெதிராக முதலில் குரல் கொடுத்தவர் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த சீதாராம் யெச்சூரி. இந்த பின்னணி கொண்டவர்கள்தான் அரசுக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

இவர்கள் தமிழக அரசுக்கு என்னென்ன ஆலோசனைகள் வழங்குகின்றனர், அதனை தமிழக நிதியமைச்சரும் முதல்வரும் எப்படி ஏற்கின்றனர், அதனால் தமிழகம் எப்படி முன்னேறுகிறது என பொறுத்திருந்து பார்ப்போம்.

சங்கீத பிரியன்

# திரித்துக் கூறும் தியாகராஜன்

சட்டசபை தேர்தலையொட்டி தி.மு.க., வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், 'ஆட்சிக்கு வந்தால், பெட்ரோல் விலை லிட்டருக்கு, ரூ. 5, டீசல் விலை லிட்டருக்கு ரூ. 4 குறைக்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டது. தற்போது, பெட்ரோல் விலை லிட்டர், 100 ரூபாயை நெருங்கும் நிலையில், ஏன் விலையை குறைக்கவில்லை என பொதுமக்கள் கேள்வி எழுப்பினர்.

இந்த சூழலில், பத்திரிகையாளர்களைச் சந்தித்த, தமிழக நிதியமைச்சர் தியாகராஜன், 'தமிழகத்தில் பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்படும், மதிப்பு கூட்டு வரியான, 'வாட்' வரியை குறைக்க முடியாது' என முன்னுக்குப்பின் முரணாக பேசியுள்ளார். மேலும், அதற்கான எந்த நியாயமான காரணத்தையும் அவர் விளக்கவில்லை. தன் கட்சியின் தவறை மறைக்க மத்திய அரசை குறைகூறியுள்ளார். அவரது பேச்சு, தாங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டோம், தான் தான் இம்மாநில நிதியமைச்சர் என்று அறியாமல் இன்னமும் எதிர்கட்சி மனோபாவத்தில் பேசுகிறாரா அல்லது அந்த ஆணவத்தில் பேசுகிறாரா என புரிந்துகொள்ளமுடியாத அளவிற்கு குழப்பமாக உள்ளது.

அவரது வாதப்படி ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு, 10 ரூபாயாக இருந்த கலால் வரியை, 32.90 ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியது உண்மைதான். ஆனால், அதனால்தானே இன்றைய சூழலில் கொரோனாவுக்கு இலவச சிகிச்சை, இலவச தடுப்பூசி, மருத்துவ உபகரணங்கள், சாலைகள் எல்லாம் சாத்தியமாகிறது. மேலும் கலால் வரியைக் குறைத்தால் அதன் பலன் வியாபாரிகள் கூடுதல் லாபம் பெற வழி வகுக்குமேயன்றி மக்களுக்கு போய் சேராது. இந்த சிறிய உண்மை பாமரனுக்கே தெரியும்போது அது அமைச்சருக்குத் தெரியாதது ஏனோ?

மத்திய அரசு வசூலிக்கும் 32.90 ரூபாய் கலால் வரியில், 31.50 ரூபாயை மத்திய அரசே எடுத்துக் கொள்கிறது. 1.40 ரூபாயை மட்டுமே மாநிலங்களுக்கு வழங்குகிறத' என அப்பட்டமாக பொய் கூறியுள்ளார் அமைச்சர் தியாகராஜன். அடிப்படை கலால் வரி ரூ. 1.40, சிறப்பு கூடுதல் கலால் வரி ரூ. 11, வேளாண் தீர்வை ரூ. 2.50, சாலை மற்றும் உட்கட்டுமானத் தீர்வை ரூ. 18 என இந்த கலால் வரி பிரிக்கப்படுகிரது. அதில், சாலை மற்றும் உட்கட்டுமானத் தீர்வையும், வேளாண் தீர்வையும் (18 + 2.50) இணைந்து ரூ. 20.50 மத்திய அரசுக்கு செல்கிறது. மீதமுள்ள ரூ.12.50 மா நில அரசுகளுக்குத்தானே பிரித்துக் கொடுக்கப்படுகிறது? மத்திய அரசின் வேளாண் தீர்வையும் விவசாயிகளுக்கு தரப்படும் ரூ. 6,000 என மறைமுகமாக மாநிலங்களுக்குத்தானே வருகிறது?

அடுத்ததாக, 'பெட்ரோல் விலை 98 ரூபாய் என்றால், அதில் 70 ரூபாய் மத்திய அரசுக்கே செல்கிறது' என ஏதோ மத்திய அரசே அனைத்தையும் எடுத்துக்கொள்வதுபோல குறைகூறும் அமைச்சர், அதனை தயாரிக்கும் நிறுவனங்களின் உற்பத்தி செலவு, கப்பல், லாரி போக்குவரத்து செலவு, டீலர் கமிஷன், பராமரிப்பு, சம்பளம் என பல்வேறு செலவுகளுக்குத்தானே அந்த பணம் செலவாகிறது. இதில் ஒரு செலவும் செய்யாத மாநிலத்துக்குத்தானே மீதமுள்ள 28 ரூபாயும் மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட வரிகள் வாயிலாக வந்து சேர்கிறது? என்பதை திட்டமிட்டே மறைத்துவிட்டார்.

நியாயமாகப் பார்த்தால் வாக்குறுதி அளித்துவிட்டு அதை நிறைவேற்றத் தவறுவது, பொய்யாக குற்றச்சாட்டு வைப்பது,



திசைத் திருப்புவது, திரித்துக் கூறுவது, உண்மையை மறைப்பது போன்றவை இந்திய தண்டனைச் சட்டப்படி குற்றம். இதற்காக ஒரு குடிமகன் அமைச்சர் மீது வழக்குத் தொடுக்க முடியும். தண்டனையும் வாங்கித்தர முடியும்.

தற்போதைய கொரோனா சூழலில் தமிழக அரசின் செலவினங்களுக்கு அதிகப் பணம் தேவை உள்ளதால் இப்போதைக்கு நடைமுறைப்படுத்த இயலாது. சூழல் சரியான பிறகு செய்கிறோம் என கௌரவமாக கூறியிருக்கலாம். ஆனால், அதைவிடுத்து வழக்கம்போலவே மத்திய அரசை குறை கூறி தப்பித்துக்கொள்ளலாம் என நினைத்து தன் அறியாமையையும் இயலாமையையும் மீண்டும் ஒருமுறை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார் அமைச்சர் தியாகராஜன்.

மதிமுகன்

## வருங்கால வைப்பு நிதி புதிய அறிவிப்பு

கொரோனா பரவலால், கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் பொருளாதார பாதிப்புகள் ஏற்பட்டன. அதனையடுத்து கணக்கில் உள்ள பணத்தை முன்பணமாக எடுத்துக் கொள்ளும் வசதியை வருங்கால வைப்பு நிதி அளித்தது. மேலும் தங்கள் கணக்கில் உள்ள பணத்தில் இருந்து, அதிகபட்சம் 75 சதவீதம்வரை எடுத்துக்கொள்ள கடந்த மாதம் அனுமதி அளித்துள்ளது. இந்நிலையில் வேலையை இழந்து கணக்கில் வரவு செலுத்தப்படாதவர்களும், அவர்களின் கணக்கில் இருந்து பணத்தை எடுத்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கணக்கை முடிக்காமல் உள்ளதால் பென்ஷனுக்கான அனைத்துத் தகுதிகளும் வழக்கம்போல தொடரும் என அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஜியோ வாடிக்கையாளர் அதிகரிப்பு

ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் கடந்த மார்ச் மாதத்தில் அதிக வாடிக்கையாளர்களை ஈர்த்துள்ளது. இந்திய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (டிராய்) கருத்துப்படி, ஜியோ, 79 லட்சம் வாடிக்கையாளர்களை கூடுதலாக பெற்றுள்ளது. போட்டி நிறுவனங்களான பாரதி ஏர்டெல் 40.5 லட்சம் வாடிக்கையாளர்களையும் வோடபோன் ஐடியா 10.8 லட்சம் வாடிக்கையாளர்களையும் கூடுதலாக பெற்றுள்ளன. டிராய் தரவுகளின் படி, மார்ச் மாதத்தில் ரிலையன்ஸ் ஜியோவின் மொத்த வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை, 42.29 கோடியாகவும் ஏர்டெல் வாடிக்கையாளர் எண்ணிக்கை 35.23 கோடியாகவும் வோடபோன் ஐடியா வாடிக்கையாளர் எண்ணிக்கை 28.37 கோடியாகவும் அதிகரித்துள்ளன.



# நபார்டு கடனுதவி

தலைமை செயலகத்தில் நபார்டு வங்கியின் தலைவர் ஜி.ஆர்.சிந்தலா, முதல்வர் ஸ்டாலினை சந்தித்து உரையாடினார். அப்போது, நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், 3,000 கோடி ரூபாய் வரை உதவி வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில், தமிழகத்திற்கு நபார்டு வங்கி உதவி, 40 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும். இது கடந்தாண்டு, 27 ஆயிரத்து, 40 கோடி ரூபாயாக இருந்தது. மேலும், அடுத்த ஐந்து ஆண்டுகளில், தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில், 'அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி' என்ற லட்சியத்தின் அடிப்படையில், நபார்டு வங்கிக்கும், எஸ்.பி.ஐ., வங்கிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது.





# டுவிட்டரின் உண்மை முகம்

வலதுசாரி ஆதரவாளர்கள், தேச நலன் விரும்பிகள் உள்ளிட்டோரின் புளூ டிக்கை நீக்குதல், கணக்குகளை முடக்குதல் என செயல்பட்டு வரும் டுவிட்டர், பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா (பி.எப்.ஐ) என்ற பயங்கரவாத ஆதரவு அமைப்பின் கர்நாடக கிளைக்கு ‘புளூ டிக்’ வழங்கியுள்ளது. பி.எப்.ஐ அமைப்பு, பயங்கரவாதத்திற்கு நிதியுதவி, கறுப்புப் பண பரிவர்த்தனைகள், வெளிநாட்டுப் பண மோசடி, லவ் ஜிஹாத், பயங்கரவாத பயிற்சி என பல வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளது. சமீபத்தில்கூட, 200க்கும் அதிகமான தமிழகம், உத்தர பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு இந்த அமைப்பு கேரள வனப்பகுதிகளில் ஆயுதப் பயிற்சி அளித்தது. இந்த அமைப்பை முடக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் எழுந்துள்ளன. இந்த நேரத்தில் அவர்களின் டுவிட்டர் கணக்கிற்கு ‘புளூ டிக்’ வழங்கி தனது பாரதத்திற்கு எதிரான நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது டுவிட்டர்.

# சம்பத் ராய் மீது பொய் புகார்



நரேன் என்பவர் தனது சமூக ஊடகப் பதிவில், ‘வி.எச்.பி தலைவரும், ஸ்ரீராம ஜன்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின் பொதுச் செயலாளருமான சம்பத் ராய் நில அபகரிப்பு வழக்கில் தொடர்புடையவர். வெளிநாட்டில் வாழும் அல்கா லஹோட்டிக்கு என்பவருக்கு சொந்தமான 20,000 சதுர மீட்டர் கோசாலை நிலத்தை அபகரிக்க சம்பத் ராய் குடும்பத்தினர் முயற்சித்தனர். அதற்காக முதல்வர் யோகி ஆதித்யநாத்திடம் முறையிட்டோம்’ என்று அடிப்படை ஆதாரமற்ற பொய் குற்றச்சாட்டு தெரிவித்திருந்தார். இது குறித்து பிஜ்னோர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நரேன் உடன் இணைந்து இதில் சம்பந்தப்பட்ட லஹோட்டி, ரஜ்னீஷ் ஆகிய மூவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



# ஷைலஜா டீச்சருக்கு விருது

ஜார்ஜ் சோரஸ் நிதியுதவியின் கீழ் இயங்கும் சென்ட்ரல் யூரோப்பியன் யுனிவர்சிட்டி என்ற பல்கலைக்கழகம் முன்னாள் கேரள சுகாதார அமைச்சரான ஷைலாஜா டீச்சருக்கு கொரோனா சேவையை பாராட்டி விருது வழங்கியுள்ளது. பொது சுகாதார சேவையில் அர்ப்பணிப்புடன் அவர் செயல்பட்டார் என கூறி, அவருக்கு 'ஐடியல்ஸ் ஆப் ஏன் ஓப்பன் சொசைட்டி' என்ற விருதினை வழங்கியுள்ளது. பெரும் கோடீஸ்வரர், தீவிர இடதுசாரி ஆதரவாளர், பாரத அரசியல் உட்பட பல நாடுகளின் அரசியலில் தேவையின்றி மூக்கை நுழைப்பவர், அதற்காக பெரும் பணம் செலவிடுபவர், அரசியல் ஸ்திரத்தன்மையை குலைத்து ஆதாயம் தேட முயல்பவர் என அறியப்படுபவர் ஜார்ஜ் சோரஸ் என்பதும், ஷைலாஜா டீச்சர் அமைச்சராக இருந்தபொழுது, பாரதத்தில் கொரோனா தொற்றில் முதலிடத்தில் மகாராஷ்டிராவும், கேரளா இரண்டாம் இடத்திலும் இருந்தது குறிப்பிடத்தக்கது. எனவே, இவ்விருது அரசியல் ஆதாயத்திற்காக தரப்பட்டது என்பதே உண்மை என நெட்டிசன்கள் கருத்து பதிவிட்டு வருகின்றனர்.

# தவறான செய்திகளை பரப்பும் பி.டி.ஐ.




லட்சத்தீவுகளின் நீதிமன்ற அதிகார வரம்பை கேரளாவில் இருந்து கர்நாடகத்திற்கு மாற்ற லட்சத்தீவு நிர்வாகம் முடிவெடுத்து உள்ளதாக பி.டி.ஐ தனது டுவிட்டரில் தெரிவித்திருந்தது. ஆனால், அப்படி மாற்றும் எண்ணம் ஏதும் இல்லை என லட்சத்தீவு நிர்வாகம் மறுத்துள்ளது.




# பி.டி.ஐயின் போலி செய்திகள்

செய்தி நிறுவனமான பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா (பி.டி.ஐ) பலமுறை தவறான செய்திகளை பரப்பிய வரலாற்றைக் கொண்டுள்ளது. உதாரணமாக, கடந்த ஏப்ரல் மாதம், டெல்லியில் உள்ள சர் கங்கா ராம் மருத்துவமனையில் ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் 25 பேர் இறந்ததாக பி.டி.ஐ தெரிவித்திருந்தது. ஆனால்,. ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் எந்த மரணமும் நிகழவில்லை என்று மருத்துவமனை தெளிவுபடுத்தியது. கடந்த 2020 ஆகஸ்டில், கொரோனா வைரஸ் பரவல் குறித்து பிரதமர் மோடியின் பேச்சை, தவறாக செய்திப்படுத்தியது பி.டி.ஐ. பிரதமர் மோடி குறித்து பொய் பிரச்சாரம் செய்ய இந்த ட்வீட்டை காங்கிரஸ் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. அது பொய் என நிரூபிக்கப்பட்டப் பிறகு அதனை நீக்கியது காங்கிரஸ். அதேபோல, கடந்த அக்டோபர் 2020ல், சீனா தங்கள் நாடு குறித்து சுய பிரச்சாரம் செய்துகொள்ள ஏதுவாக தங்கள் செய்தி நிறுவனத்தை பயன்படுத்த பி.டி.ஐ அனுமதித்தது. இதனை அடுத்து பிரசார் பாரதி, பி.டி.ஐ உடனான தனது செய்திப் பகிர்வு ஒப்பந்தத்தை ரத்து செய்தது.

# சீனா சொல்வது உண்மையா?



கொரோனாவை உலகிற்கு அறிமுகப்படுத்திய சீனாவில் தற்போது கோவிட் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேசமயம், நான்கு உள்நாட்டு நிறுவனங்களின் தடுப்பூசிகளைத் தவிர வேறு தடுப்பூசிகளுக்கு சீன அரசு அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில், சீனாவில் இதுவரை 100 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இதில் 10 கோடி தடுப்பூசிகள் கடந்த 5 நாட்களில் மட்டும் செலுத்தப்பட்டுள்ளது. 2 லட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டினருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என சீன சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது. எனினும், அந்த செய்தியின் முழுமையான நம்பகத்தன்மை குறித்து மற்ற நாடுகள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

# இடம் பெயரும் சாம்சங்




சீனாவின் சமீபத்திய போக்கு காரணமாக, சீனாவில் இருந்து தனது பல்வேறு நிறுவனங்களும் தங்கள் உற்பத்தி ஆலைகளை வேறு நாடுகளுக்கு குறிப்பாக பாரதத்திற்கு இடம் மாற்றி வருகின்றன. அதில் முக்கியமான நிறுவனம் சாம்சங். தற்போது உத்தர பிரதேசம் நொய்டாவிற்கு அதன் ஓ.எல்.இ.டி அலைபேசி திரை உற்பத்தி ஆலையை இடம் மாற்றுகிறது. இது உலகின் மூன்றாவது ஓ.எல்.இ.டி திரைகள் உற்பத்தி தொழிற்சாலையாகும். சாம்சங்கின் தலைமை நிர்வாக அதிகாரி கென் காங், கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சந்தித்து இது குறித்து பேசினார். கடந்த ஆண்டு டிசம்பர் முதல் உ.பியில் சுமார் 5,000 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது சாம்சங். இந்நிறுவனம் ஏற்கனவே 2018 முதல் நொய்டாவில் ஒரு மொபைல் உற்பத்தி ஆலையை அமைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பதில் அளிக்க மறுத்த மஹ்மூத் குரேஷி



பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி, டோலோ நியூஸ் என்ற தொலைக்காட்சிக்கு சமீபத்தில் பேட்டி அளித்தார். நேர்காணலின் போது, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஒசாமா பின்லேடனை ‘தியாகி’ என்று அழைத்தை சுட்டிக்காட்டினார் செய்தியாளர். அதற்கு, ‘பிரதமர், அவர் சூழலில் இருந்து மேற்கோள் காட்டினார். ஆனால், ஊடகங்கள் அதில் இருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டது’ என்று கூறினார் குரேஷி. மேலும், இது குறித்து குரேஷியின் நிலைப்பாட்டை அந்த செய்தியாளர் கேட்டபோது, ‘நான் அதற்கு பதில் அளிக்க மாட்டேன்’ என கூறிவிட்டார் குரேஷி.




# கவர்னரின் உரை திரிப்பா?



தமிழக கவர்னர் தனது உரையில் 'மத்திய அரசு' என்ற பொருளில் 'யூனியன் கவர்மெண்ட்' என குறிப்பிட்டதை வேண்டும் என்றே மாற்றி 'ஒன்றிய அரசு' என சட்டசபையில் தமிழாக்கம் செய்து வெளியிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகிறது. இது கண்டிக்கத்தக்கது. மத்திய அரசு என அழைக்கப்படுவதே மரபு எனும்போது, தற்போது ஸ்டாலின் தலைமையில் அமைந்துள்ள தமிழக அரசு, அதனை மாற்றி ஒன்றிய அரசு என அழைப்பது, தி.மு.க பிரிவினைக்கு வித்திடுகிறதா என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது.


## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# வலையில் சிக்கிய மீம்கள் . . .






:தற்போது உள்ள சூழ்நிலையில் டாஸ்மாக் மூட முடியாது
:தற்போது உள்ள சூழ்நிலையில் பெட்ரோல் விலை குறைக்க முடியாது
:தற்போது உள்ள சூழ்நிலையில் நீட் ரத்து செய்ய முடியாது
:தற்போது உள்ள சூழ்நிலையில் மின்சார கட்டனத்துக்கு அவகாசம் கொடுக்க முடியாது




வேற வேற வேற என்னென்ன இருக்கு

நீட் தேர்வு நடைமுறையில் உள்ளதால் மாணவர்கள் நீட் தேர்வுக்கு தயாராக வேண்டும்- அமைச்சர் மா.சு





இதத்தானே அவங்களும் சொன்னாங்க